# 'கட்டமைப்பு மாற்றத்' திற்காக

2022ஆம் ஆண்டு அரகலய/போராட்டம் மேற்கொள்ளப்பட்டு ஏறக்குறைய மூன்று வருடங்களாகின்றது. இப்போராட்டத்தின் போது மக்கள் அதிகாரத்தினைத் தமது கையிலெடுத்து மோசமான பொருளாதார நெருக்கடியினைத் தூண்டிய, மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்ற, இனவாதம் மற்றும் ஊழல் மிக்க அரசாங்கத்தினை வீழ்த்தினர்.

மக்கள் இயக்கத்தினால் உந்தப்பட்டு உருவான அரசியல் விழிப்புணர்வினைப் பின்புலமாகக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட **தேசிய மக்கள் சக்தியானது** ஆட்சிக்கு வந்து ஏறக்குறைய ஒரு வருடமாகின்றது. மக்கள் போராட்டமானது (அரகலயவானது) அப்போதிருந்த ஜனாதிபதியினை வீழ்த்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், ஒருவருக்கு பதிலாக மற்றொருவரை மாற்றீடு செய்வதையோ அல்லது ஒரே பையிலுள்ள அட்டைகளை மீண்டும் ஒழுங்குபடுத்துவதையோ தாம் விரும்பவில்லை என்பதை மக்கள் காலப்போக்கில் உணர்ந்துகொண்டதுடன் அவர்களது கோரிக்கைகளும் விரிவடைந்தன. முறையாக வரைவிலக்கணப்படுத்தப்படாத போதும்,, வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு அர்த்தத்தினைக் கொடுத்தபோதும் மக்கள் - ஒரு 'கட்டமைப்பு மாற்றத்தினை' கோரியதோடு அதற்காக வாக்களித்தனர்.

இக்கொள்கைச் சுருக்கமானது இனம், பால்நிலை மற்றும் பொருளாதார நீதியினை மையமாகக்கொண்ட கட்டமைப்பு மாற்றம் தொடர்பில் பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்களின் புரிந்துணர்வினை வெளிப்படுத்துவதற்கும், முதலாளித்துவம், ஆணாதிக்கம், தேசியவாதம் மற்றும் இராணுவமயமாக்கம் போன்றவற்றிலுள்ள வன்முறைகளைச் சவாலுக்குட்படுத்துவதற்கும், உற்பத்தி மற்றும் மீள்உற்பத்திக்குமிடையிலான இருமைப் பிரிவினையினைக் கேள்விக்குட்படுத்தவும், எமது அனுபவங்களும், அடையாளங்களும், சவால்களும் இனத்துவம், மாற்றுத்திறன், வயது, பாலியல் நாட்டம், பால்நிலை அடையாளம், சமூகப்பொருளாதார அந்தஸ்து மற்றும் புவியியல் ரீதியான இடம் போன்ற இடைவெட்டும் காரணிகளினால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது என்பதனை அங்கீகரிக்கவும் 2025 ஏப்ரல் மற்றும் யூலைக்கிடையில் நாட்டின் வெவ்வேறுபட்ட பாகங்களிலும் பணிபுரிகின்ற 25இற்கும் மேற்பட்ட பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றது.

மக்கள் போராட்டத்திற்கு (அரகலய) முன்னரே ஆரம்பித்து அதற்குப் பின்னரும் தொடர்கின்ற எம்முடன் பேசிய செயற்பாட்டாளர்களின் பல போராட்டங்களினால் நாம் ஊக்குவிக்கப்பட்டோம். அதன் விளைவாக அவர்களின் போராட்டங்களில் நாம் உடனிருக்கின்றோம். ஆயினும், இக்கொள்கைச் சுருக்கமானது அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவோ அல்லது அவர்களுக்காகப் பேசுவதாகவோ நாம் கருதவில்லை. அல்லது இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்துப் பெண்களதும் அனைத்துக் கோரிக்கைகளையும் பூரணமாக முன்வைக்கவுமில்லை. பல பெண்களையும், பரவலாக அனைத்து பிரஜைகளையும் பாதிக்கின்ற இரண்டு அத்தியாவசியமான துறைகளான சுகாதாரமும், கல்வியும் இக் கொள்கைச் சுருக்கத்தில் விரிவாக ஆராயப்படவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

இக்கொள்கைச் சுருக்கத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மாற்றத்திற்கான கண்ணோட்டமானது 'பெண்களின் பிரச்சினைகளாக' கருதப்பட்டு வருகின்ற, தொடர்ந்தும் கருதப்படுகின்றவற்றுடன் மட்டுப்படுத்தப்படவில்லை. பெண்கள் ஒரு ஒற்றைப்படையான ஒரு பிரிவு இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். 'பெண்கள்' என்பதன் மூலம் நாம் தம்மைப் பெண்களாக அடையாளப்படுத்துபவர்களையும், பிறப்பின் போது பெண்களாக அடையாளப்படுத்தப்பட்டவர்களையும், **குயர்** பெண்களையும் குறிக்கின்றோம்.இக்கோரிக்கைகள் சமூகத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் எதிர்கொள்கின்ற இடைவெட்டும் சமூக, அரசியல், தனிப்பட்ட மற்றும் பொருளாதார அநீதிகள் மற்றும் அசமத்துவங்களினடிப்படையில் சில முக்கியமான பிரச்சினைகளை இக்கோரிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. அவை எமது ஜனநாயகத்தினை ஆழப்படுத்துவதற்கான நீண்டகால கோரிக்கைகளையும் வலுப்படுத்துகின்றன. நாம் பெண்களின் பல்வகைப்பட்ட அனுபவங்களைக் கவனத்தில் கொள்வதுடன் சமூகத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்தோராலும் எதிர்கொள்ளப்படும் ஒன்றுடனொன்று இடைவெட்டும் சமூக, அரசியல், தனிப்பட்ட மற்றும் பொருளாதார அநீதிகளையும், சமத்துவமின்மைகளையும் அங்கீகரிக்கின்றோம். எமது ஜனநாயகத்தினை ஆழப்படுத்துவதற்கான நீண்டகால கோரிக்கைகளையும் நாம் வலுப்படுத்த விரும்புகின்றோம்.

இங்கு வழங்கப்பட்டுள்ள பல பரிந்துரைகள் பெண்களுக்கெதிரான அனைத்து விதமான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சர்வதேச சமவாயம் தொடர்பில் இலங்கை அளித்த வாக்குறுதிகளுடனும், 2025 பெப்ரவரியில் சீடோ (CEDAW) ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட அவதான முடிவுகளுடனும் ஒத்திசைபவையாக உள்ளன.

மேலும், **தேசிய மக்கள் சக்தி** அரசாங்கம் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு அரசுக்கும் மக்களுக்குமிடையிலான புதியதோர் சமூக உடன்பாட்டிற்கு உத்தரவாதமளித்து வெளியிட்ட தமது தேர்தல் விஞ்ஞாபனமான – வளமான நாடு, அழகான வாழ்க்கையில் - அளித்த தனது வாக்குறுதிகளை நினைவுபடுத்தும் ஆவணமாகவும் இது அமைகின்றது. அரசியல் விஞ்ஞாபனங்களில் வழங்கப்படும் வாக்குறுதிகள் தேர்தலுக்கானவையாகவும், அதன்பின் தூக்கி வீசப்படுபவையாகவும் இருக்கக்கூடாது. நவம்பர்

**நவம்பர் 2025**

**சமூக விஞ்ஞானிகள் சங்கம்**

# அதிகாரம், அரசியல் மற்றும் ஜனநாயகம்


இலங்கையானது சிறுபான்மையினரின் உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்ற ஒரு பெரும்பான்மையின ஜனநாயகமாக இருக்கின்றது. தேர்தல்களுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் மக்களுக்கு எந்தவிதமான குரல்களும் இல்லை, அத்துடன் அரசின் தன்மையானது அதிகாரத்தினை மையப்படுத்தியதாகவும், வளங்களை நியாயமற்ற முறையில் பகிர்ந்தளிப்பதாகவும் இருக்கின்றது.

- 1978ம் ஆண்டு ஜே.ஆர் ஜெயவர்தன அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட **நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை** ஜனநாயக ஆட்சி முறைமைகளுக்குள் சில ஒத்த தன்மைகளையே கொண்டிருக்கின்றது. தொடர்ந்து வந்த ஜனாதிபதிகள் அதன் குறைபாட்டினைச் சுட்டிக்காட்டி, அதனை ஒழிப்பதாகக் கூறியே ஆட்சிக்கு வந்திருந்தனர். **தேசிய மக்கள் சக்தியாவது** முடிவிற்குக் கொண்டுவருமா?

- அரசியலமைப்புச் சட்டத்தின் 13வது திருத்தச்சட்டம் மற்றும் 1987ஆம் ஆண்டின் மாகாண சபைகள் சட்டம் போன்றவற்றிற்கு அப்பால் **அதிகாரப் பகிர்வினை** மேற்கொள்வதென்பது தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகின்றது. அர்த்தமுள்ள விதத்தில் அதிகாரப்பகிர்வினை மேற்கொள்வது அனைத்து மாகாணங்களிலுமுள்ள அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் என்கின்றபோதும், அது தொடர்ந்தும் பூர்த்திசெய்யப்பட முடியாததாகவே இருந்துவருகின்றது.

- தேர்தல்களுக்கிடையில் தமது விவகாரங்களைக் கையாள்வதற்கும், பங்குபற்றுவதற்கும், தம்மால் அதிகாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கும் பிரஜைகளுக்கு வாய்ப்புக்கள் தேவையாக இருக்கின்றது. தேர்தலுக்கு அப்பாற்பட்ட மக்களின் அதிகாரமும் பாராளுமன்றம் போன்ற நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை அனுப்பிவைப்பதும் மக்கள் போராட்டத்தின் பிரதான கோரிக்கைகளாக இருந்தன. தேசிய மக்கள் சக்தியானது தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும், பிரச்சாரங்களின் போதும் பரவலான பொதுமக்களின் பங்குபற்றுதலை அங்கீகரித்தது. ஆயினும் திடமான எந்தவொரு முன்மொழிவுகளையும் முன்வைக்கவில்லை. சமூக, பொருளாதார மற்றும் அரசியற் தளங்களில் விளிம்புநிலைக்குத் தள்ளப்படுவதையும், புறக்கணிக்கப்படுவதனையும் எதிர்கொள்வதற்கு, விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுவோரும், புறக்கணிக்கப்படுவோரும் அர்த்தமுள்ள விதத்திலான பிரதிநிதித்துவத்தினையும், பங்குபற்றுதலையும் கொண்டிருக்க வேண்டும். **தேசிய மக்கள் சக்தி** அரசாங்கமானது பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் பால்நிலை சமத்துவமிக்க பங்குபற்றுதலுடன் கூடிய வரவு செலவு திட்டம் உட்பட உள்ளூர் ஜனநாயகங்களைக் குறித்து இலத்தின் அமெரிக்கா மற்றும் அவற்றினைக் கொண்டிருக்கும் ஏனைய நாடுகளின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிறுவனங்கள் தொடர்ந்தும் **ஆண்களால் ஆதிக்கம்** செலுத்தப்படுகின்றன. 2024இல் பெண்களது பாராளுமன்ற பிரதிநிதித்துவமானது 5.3%இலிருந்து ஏறக்குறைய 9.8%ஆக இலங்கையின் தரநிலையிலிருந்து குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்த போதும், தெற்காசிய சராசரியான ஏறக்குறைய 22% இலிருந்து குறைந்ததாகவே இருக்கின்றது. அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் பெண்களது அரசியற் பங்குபற்றுதலுக்கு விரோதமான வெளிகளாகவே இருந்து வருகின்றன. அரசியலில் பெண்களை ஓரங்கட்டும் தன்மையானது ஆழமாகக் கட்டமைக்கப்பட்டுள்ள சமூக நியமங்கள் மற்றும் அவர்களது வகிபாகங்கள் மற்றும் நடத்தை தொடர்பான பால்நிலைசார் எதிர்பார்ப்புக்கள் போன்றவற்றில் ஆழமாக வேரூன்றியுள்ளது. நீண்டகால பால்நிலைசார் நியமங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் இவை கையாளப்படாத போது, பொதுவாழ்வில் பெண்களின் இருப்பினை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு தனிப்பட்ட இடையீடுகளோ அல்லது உத்திகளோ கட்டமைப்பு மாற்றத்திற்கோ அல்லது நிலைமாற்றத்திற்கோ இட்டுச்செல்லாது.




- இலங்கையில் ஏறக்குறைய 1976இலிருந்து **இராணுவமயமாக்கம்** என்பது அரச மற்றும் சமூகக் கட்டமைப்பின் பிரதான அம்சமாக இருந்து வருகின்றது, யுத்தம் முடிவிற்கு வந்து 15 வருடங்களின் பின்பும் தொடர்ந்தும் அவ்வாறே இருந்து வருகின்றது. பாதுகாப்பு என்பது சோதனைச் சாவடிகள், முகாம்கள், கண்காணிப்பு, மற்றும் ஆயுதமேந்திய ஆண்கள் போன்றவற்றினூடாக மட்டுமே கற்பனை செய்யக்கூடியதாகவும், வடகிழக்கு மாகாணங்களில் மக்களின் காணிகளைத் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பதற்கான நியாயப்படுத்தலாகவும் இருக்கின்றது.ஒரு காலத்தில் **பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினை** எதிர்த்த **தேசிய மக்கள் சக்தி** அரசாங்கமே நபர்களை எழுந்-தமான விதத்தில் கைதுசெய்யவும், தடுத்துவைக்கவும் அதனைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது.
- **பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது,** சட்டத்தின் முன் முறையான செயன்முறைகளுக்கும் சமத்துவத்திற்கும் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு இருக்கும் எந்தவொரு பாதுகாப்பிற்கும் மேலானதாக இருக்கின்றது. பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்து வாழும் சமூகங்களுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுக்கும் இராணுவமயமாக்கத்தினை நீக்குதல் மற்றும் பயங்கரவாதச் சட்டங்களை ரத்துச்செய்தல் போன்றவை பிரதான கோரிக்கைகளாக இருக்கின்றன.

- 2016ஆம் ஆண்டின் அரசியலமைப்புச்சட்ட திருத்தத்திற்காக பாராளுமன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய **நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை** ஒழித்தல்
- பிராந்தியங்களுக்குள் **அதிகாரப்பகிர்வினை மேற்கொள்வதற்கான தேசியளவிலான சம்மதத்தினைக்** கட்டியெழுப்புதல்
- உள்ளூர், மாகாண, மற்றும் தேசியளவில் **பிரஜைகளின் தலைமையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான** ஆக்கபூர்வமான பொறிமுறைகளை உருவாக்குதல்
- பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீட்டை அறிமுகப்படுத்திஇ அரசியல் கட்சிகளில் முடிவெடுக்கும் பதவிகளுக்கு குறைந்தது 30% பெண்களை நியமிக்க வேண்டும்.
- பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினை ரத்துச்செய்து இ மேலும் அது பயன்படுத்தப்படுவதனை உடனடியாக நிறுத்துதல். மற்றும் பயன்பாட்டைத் தடுக்க உடனடியாக தற்காலிகத் தடையை விதித்தல்
- **மக்களின் அனைத்து காணிகள், சொத்துக்கள் மற்றும் வீடுகளை** இராணுவம் மற்றும் பொலிஸ் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்தல்
- சமூகசெயற்பாட்டாளர்களைக் **கண்காணிப்பதையும், தொல்லை செய்வதையும்** நிறுத்துதல்
- விவசாயம், சுற்றுலா போன்ற வர்த்தகத் துறைகளிலும், கல்வி, சுகாதாரம் போன்ற சமூகத்துறைகளிலும் **இராணுவத்தினரின் பங்குபற்றுதலை** முடிவிற்குக் கொண்டு வருதல்
- **இராணுவ முகாம்களையும்** சோதனைச் சாவடிகளையும் நீக்குதல், முன்னாள் சேவையிலிருந்த அதிகாரிகளை **சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.**

# கடன், உணவுப்பாதுகாப்பு, வாழ்க்கைச் செலவு

2024ம் ஆண்டுத் தேர்தலைத் தொடர்ந்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, முன்னைய அரசாங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தினைப் பின்புலமாகக்கொண்ட கடன் மீளமைப்பு ஒப்பந்தத்தினை இறுதிப்படுத்தியது. இது பன்னாட்டு முறிகள் உட்பட பிரதான கடன் வழங்குநர்களுடன் நியாயமான முறையில் நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கான வாய்ப்பினை இல்லாமற் செய்துவிட்டது. கடன் மீளச்செலுத்துதலுடன் தொடர்புபட்ட செலவுகளுக்காக அரச வருமானத்தினை அதிகரிப்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கனப்படுத்தல் விதிமுறைகள் ஏழைகளின் வரிகளை அதிகரித்திருக்கின்றன. எரிபொருட்களின் விலைகளை அதிகரித்திருக்கின்றன. அத்தியாவசிய உணவுகள் மற்றும் மருந்துகளின் செலவுகளை அதிகரித்திருக்கின்றன. பெண்களின் ஊதியமற்ற பராமரிப்புப் பணிச்சுமைகளை அதிகரித்திருக்கின்றன. இது ஏழைகளுக்கு குறிப்பாக ஏழைப்பெண்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள்.

- அரசியல்வாதிகள், **கொள்கை வகுப்பாளர்கள்**, மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் போன்றன எம்மைத் தள்ளியிருக்கின்ற இக்கடன் சிக்கலானது ஒரு **அநீதியான பொறிமுறையாகும்** - பொதுவளங்களை பொதுமக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தாது, வருமானம் மற்றும் வளங்களின் அசமத்துவத்தினை மோசமடையச்செய்து, தேசிய வளங்களின் மீதான ஜனநாயகக் கட்டுப்பாட்டினை நலிவுறச் செய்திருக்கின்றது. அதிகளவிலான கடன்கள் சட்டவிரோதமானவை, பொதுமக்களுக்கு எவ்விதத்திலும் பயனுறாதவை, ஊழல்வாதிகளின் பைகளை நிரப்பியவை, அத்துடன் ‘அபிவிருத்திக்கு’ நிதியளித்தல் என்பது பயனற்றது மற்றும் சூழலுக்குத் தீங்குவிளைவிப்பதுமாகும். அதேவேளை, ஏற்றுமதி வருமானத்தில் பெறப்பட்ட பில்லியனளவிலான டொலர்கள் மற்றும் மிகையான இலாபங்கள் பல்தேசியக்காரர்களாலும், மிகவும் வசதிவாய்ப்புமிக்க சட்டவிரோத பணப்புழக்கத்தினூடாகவும் வெளிநாடுகளுக்கு திருடி எடுத்துச் செல்லப்படுகின்றது,

- வெளிநாட்டுக் கடன் மீளளிக்கும் செயற்பாடுகள் தொழில்வாய்ப்பு, வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்றவற்றிற்கு உள்ளக வளங்களைத் திரட்டுவதற்கான நிதிவாய்ப்புக்களைக் குறைப்பதுடன் **அரச கடன்கள் குடும்பக் கடன்களுடன் மிகவும் நெருக்கமாகத் தொடர்புபட்டுள்ளன.** அரசினால் கைவிடப்பட்ட ஏழைக்குடும்பங்கள் அன்றாட நுகர்வு, எதிர்பாரா செலவுகள் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளுக்கான நிதியினைப் பெறுதல போனற்வற்றிற்காக நுண்நிதிக் கடன்களை எடுத்து கடன் பிடிக்குள் வீழ்கின்றனர். பெண்கள் ஏதாவதொரு முறையில் தமது கடன்களைத் திருப்பிச்செலுத்த வழிதேடுகின்ற அதேவேளை, நகைகளை அடகுவைத்தல், நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்தும் முறைசாரா கடன்வழங்குவோரிடமிருந்தும் கடன் வாங்குதல் போன்றன பெண்களை மேலும் கடனுக்குள் தள்ளுகின்றன. நுண்கடன் துறையானது கிராமியப் பெண்களை வலுப்படுத்துவதாக வாக்குறுதியளிக்கின்றது, ஆனால் உண்மையில் நிதியினைச் சீரழித்து, மிகுந்த துயரத்தையும், தற்கொலை மூலமான இறப்பினையும் ஏற்படுத்துகின்றது. 2.8 மில்லியன் மக்கள் இக்காவுகொள்ளும் நுண்நிதிக்கடன்களில் சிக்கியுள்ளனர். அவர்களில் 2.4 மில்லியன் பேர் பெண்களாவர்.


நுண்நிதிக் கடன்



- 2022இலிருந்து உணவுப்பொருட்களின் விலை 73%இனால் அதிகரித்தமையினால் 70%ஆன வீடுகளில் உணவினைத் தவிர்ப்பது உட்பட, குறைந்தளவிலான **உணவே நுகரப்படுகின்றது.** 2022 ஒக்டோபரில், 3.9 மில்லியன் குடும்பங்கள் (இலங்கையிலுள்ள 57.5%ஆன குடும்பங்கள்) ஏதாவதொரு வகையான நிதி உதவியினை நாடியிருக்கின்றன. பணம் அல்லது உணவுக் கொடுப்பனவுகளை வழங்குவதற்குப் பதிலாக செய்யப்படவேண்டியது அத்தியாவசியமான உணவுப்பொருட்களின் விலையினைக் கட்டுப்படுத்துதல், பொது விநியோகத் திட்டத்தினை மீளநடைமுறைப்படுத்துதல், கர்ப்பிணி மற்றும் இளம் தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் வயதுமுதிர்ந்தோர் போன்றோர் போசாக்கினைப் பெற்றுக்கொள்வதற்கான மேலதிக திட்டங்கள் போன்றவையாகும். பொருளாதார நெருக்கடியினால் பெண்கள் தமது பிள்ளைகளின் ஊட்டச்சத்திற்கு முன்னுரிமையளிக்கின்ற அதேவேளை தமது ஊட்டச்சத்து நுகர்வினை மட்டுப்படுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

- நெருக்கடியினை எதிர்கொள்வதற்கு, பெரும்பாலாக பெண்களைக் கொண்டிருக்கும் சிறு விவசாயிகளை மையப்படுத்திய உணவு உற்பத்தி, விநியோகம் மற்றும் பரிமாற்றத்திற்கான நீதியானதும், நிலையானதுமான உள்ளூர் மாதிரியினை வலியுறுத்துகின்ற, உணவு இறையாண்மையினை முன்னுரிமைப்படுத்துவது அவசியமானதாகும்.

- பெண்கள் விவசாயத்தில் பிரதான பங்கினை வகிக்கின்றபோதும், விவசாயிகளாக அவர்களது பங்குபாத்திரமானது அங்கீகரிக்கப்படுவதில்லை. இலங்கையிலுள்ள பெண்களில் 16%ஆனோர் மட்டுமே தனியார் காணிகளுக்கு உரிமையாளர்களாக இருக்கின்றனர். **காணி உறுதியானது** விவசாயிகள் சங்க உறுப்புரிமை மற்றும் விவசாயத்துடன் தொடர்புபட்ட சேவைகளான உரம், நீர் மற்றும் பயிர்ச்செய்கை போன்றவை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் போன்றவற்றிற்கு பிரதானமானதாக இருக்கின்றது. பாரம்பரியமான உணவு பற்றிய அறிவின் பாதுகாவலர்களாகவும், ஒவ்வொரு புதிய அறுவடைக்கும் உள்ளூர் விதைகளைப் பாதுகாப்பவர்களாகவும், தொழிற்துறைசார் அந்நிய உள்ளீடுகளில் தங்கியிருக்கும் விவசாயத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் சூழற்தொகுதியில் பாரம்பரியமான தாவர வகைகள் பிழைத்திருப்பதையும், கடத்தப்படுவதையும் உறுதிப்படுத்துபவர்களாகவும் பெண்களே இருந்து வருகின்றனர். அதனால் பெண்களே உணவு இறையாண்மையினை நோக்கிய மாற்றத்தினை வழிநடத்துபவர்களாகவும், நிலைபேறானதாக ஆக்குபவர்களாகவும் இருக்க முடியும்.



- சட்டவிரோதமான அல்லது பயங்கரமான கடன்களை அடையாளங் காண்பதற்கு பிரஜைகளின் பங்குபற்றுதலுடன் பொதுக்கடன்களை கணக்காய்வு செய்தல்.
- பொதுக்கணக்காய்வின் கண்டடைவுகள் வரும்வரை கடன் சேவைகளை நிறுத்திவைத்தல்.
- அனைத்து நுண்நிதிக்கடன்களையும் மீளளிப்பதனை நிறுத்தி வைத்தல், நுண்நிதிக்கடனால் பாதிக்கப்பட்டவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்தி, நுண்நிதிக்கடன்களை இரத்துச்செய்தல்
- கிராமிய சமூகங்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய கடன் நிதிமூலங்களை அணுகக்கூடிய தன்மையினை ஏற்படுத்தல்
- பெண்களுக்கு காணி உறுதிகள் வழங்கி, ஆண்களைப்போல சங்கங்களை உருவாக்குவதற்கும் விவசாய வளங்களைப் பயன்படுத்துவதற்கும் அனுமதித்தல்
- அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை நிர்ணயிப்பதில் அரசின் தலையீடு.
- 60 வயதிற்கு மேற்பட்டோர், 5 வயதிற்குட்பட்ட சிறுவர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கான கட்டாய மேலதிக கொடுப்பனவுகளுடனான சர்வதேச சமூகப் பாதுகாப்பு
- முற்போக்கான நேரடி வரிக்கட்டமைப்பு மற்றும் உணவுப்பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், மருந்துகள் மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புடைய பொருட்கள், புத்தகங்கள், ஏனையவை போன்ற அத்தியாவசியப் பொருட்களின் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகளை நீக்குதல்

## ஊதியத்துடனான வேலை

இலங்கையிலுள்ள முறைசார் தொழிலாளர்களில் ஏறக்குறைய 34%ஆனோர் பெண்களாக இருக்கின்றனர். பொதுத்துறைக்கும் (சுகாதாரம், கல்வி, அரச சேவைகள்) மேலதிகமாக, அவர்கள் இலங்கையிலுள்ள முறைசார் தொழிலாளர்களில் ஏறக்குறைய 34%ஆனோர் பெண்களாக இருக்கின்றனர். பொதுத்துறைக்கும் (சுகாதாரம், கல்வி, அரச சேவைகள்) மேலதிகமாக, அவர்கள் புலம்பெயர் வருவாய், ஆடைத்துறை, தேயிலை மற்றும் இறப்பர் போன்றவற்றினூடாக அந்நியச் செலாவணியினை ஈட்டித்தந்து பொருளாதாரத்தினைத் தாங்கிப்பிடிக்கும் துறைகளின் முதகெலும்பாகவும் இருக்கின்றனர்.

**இலங்கையின் முறைசார் பணியாளர்களில் சுமார் 34% பெண்கள் உள்ளனர்**

- இத்துறைகள் தொடர்ந்தும் சங்கங்களாகாமல் அல்லது சங்கங்கள் **ஆண்களால் அதிகளவில் ஆதிக்கம்செலுத்தப்படும்** ஆணாதிக்க வெளிகளாகவே இருந்துவருகின்றன. ஊதிய வாரியம் மற்றும் **தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபை** போன்ற துறைசார் செயற்பாடுகளைத் தீர்மானிப்பதற்குரிய தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைப்புக்களில் பெண்கள் எவரும் இல்லை. இவ் இடைவெளியினை நிரப்புவதற்கும், தொழிலாளர் உரிமைகளுக்காக போராடுவதற்கும் பெண்களால் தலைமை தாங்கப்படும் தொழிற்சங்கங்கள் அதிக பிரயத்தனங்களை மேற்கொள்ளுகின்றபோதும், அவர்கள் அதிகளவிலான சவால்களை எதிர்கொள்கின்றனர்.

- இலங்கையின் **அந்நியச் செலாவணி வருவாய்** மறுக்க முடியாத அளவுக்கு ' பெண்கள்வயப்பட்டதாக' இருந்தாலும், இத்துறைகள் இலாபமீட்டினாலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பின் ஆபத்தான நிலைமைகள் இருந்தபோதிலும், இந்தத் துறைகளில் பணி-புரியும் பெண்களின் ஊதியம் குறைவாகவே உள்ளது. மேலும், கோவிட்-19 தொற்றுநோயின் உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார தாக்கம் மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு வரி விதிப்பு tariffs ஆகியவற்றின் சுமையை ஆடைத் துறையில் உள்ள பெண்கள் தாங்கிக் கொள்கிறார்கள். கோவிட்-19 தொற்றுநோயின் போது, நாட்டில் பல இடங்கள் மூடப்பட்டன, மேலும் தொழிற்சாலைகள் “அத்தியாவசிய சேவைகள்“ என்று அறிவிக்கப்பட்டு தொடர்ந்து இயங்கின. இதன் விளைவாக, கோவிட்-19 அவர்களிடையே பரவியது மற்றும் நோயாளிகளின் பெரிய குழுக்கள் உருவாகின. ஆனால் தொழில்கள் பெண்களின் உழைப்பால் லாபம் ஈட்டின.

- தேயிலை போன்ற முக்கிய ஏற்றுமதி விவசாயப் பொருட்களில் பெண்களே அதிக சதவீத தொழிலாளர்களாக உள்ளனர். தொழிலாளர்களுக்கான ஊதியம் மற்றும் தரநிலைகளை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தங்கள் நீண்ட காலத்திற்கு முன்பே ரத்து செய்யப்பட்டுள்ளன. தோட்டப்புறங்களில் பணிபுரியும் மலையகத் தமிழ்ப் பெண்களும் போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் வேலை செய்கிறார்கள் மற்றும் பாதுகாப்பற்ற வீடுகளில் வாழ்கின்றனர். இந்தப் பிரச்சினைகள் அவர்கள் கௌரவமான வேலைகளையோ அல்லது சிறந்த வாழ்க்கை நிலைமைகளையோ அணுகுவதற்கு தடையாக அமைகின்றன, இதனால் ஏற்கனவே பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் சமூகத்தின் வாழ்க்கை கடினமாகின்றது

- இலங்கையின் மிகப் பெரிய அந்நியச் செலாவணிக்கு மூலமாக இருப்பது வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அல்லது ஏற்றுமதி வருவாயல்ல. வெளிநாடுகளில் வீட்டு சேவையில் ஈடுபடும் தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கும் வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களே ஆகும். இருப்பி-னும், வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்கள் நோயுற்ற நிலையின்போது வேலை இழக்கும் சூழலில் அல்லது முதுமை வயதில் சமூக பாதுகாப்பு வசதிகள் அவர்களுக்கு கிடைப்பதில்லை. தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு நன்மை பயக்கும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆணையம் சுரண்டல்களை கவனிக்காமல் தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் அதிக விருப்பம் காட்டுகின்றது.


- **தொழிலாளர் படையில் பெண்களின் பங்கேற்பினை** அதிகரிப்பது இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வல்ல, பெண்களை வலுப்படுத்துவதற்குவதற்கான ஒரு வழியுமல்ல. சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் அவர்களின் உள்ளூர் இணைச்செயற்பாட்டாளர்கள் வாராந்தம் ஒவ்வொரு நாளும் இரவும் பகலும் பெண்கள் செய்யும் ஊதியமற்ற வேலைகளுக்கு மேலதிகமாக ஊதியத்துடன் கூடிய வேலைகளைச் செய்யவேண்டுமென விரும்புகின்றார்கள். இலங்கையில் 57.2%இற்கும் அதிகமான பெண்கள் வீட்டுவேலைகளில் ஈடுபடுகின்ற அதேவேளை 5%ஆன ஆண்களே வீட்டுவேலைகளில் ஈடுபடுகின்றனர். பெண்களின் ஊதியமற்ற பராமரிப்புப் பணிகளை அங்கீகரிப்பதற்கும், குறைப்பதற்கும், மீளப்பகிர்வதற்கும் எதுவும் கூறப்படவோ செய்யப்படவோ இல்லை.

- பெண்கள் பணம்சார் பொருளாதாரத்தில் முன்னரே ஈடுபட்டு வருகின்றனர். அவற்றில் அதிகமானவை முறைசாராதவை என்பதால் அவர்கள் வெளித்தெரிவதில்லை. உப்பளம், பருவகால பெருந்தோட்டங்கள் மற்றும் சிறியளவிலான உணவுச்சேவைகள் போன்றவற்றில் சாதாரண நாட்கூலிகளாகவும் வேலை செய்கின்ற அதேவேளை, பெண்கள் குறைவான ஊதியமளிக்கப்படும்

வீட்டுவேலைகளில் ஈடுபடுவது மிகைப்படுத்திக் காட்டப்படுகின்றது. சிறிய உணவுப்பொருட்களை விற்பனைக்காக தயார்செய்தல், விளக்குத்திரிகளை உருவாக்குதல், அட்டைப்பெட்டிகளை பொருத்துதல், களியினால் செங்கற்களை உருவாக்குதல் போன்றவற்றினை மேற்கொள்வதன் மூலம் வீட்டிலிருந்தே சந்தைக்காகவும் வேலைசெய்கின்றனர். வீட்டிற்குள்ளோ வெளியிலோ, முறைசார்ந்தோ முறைசாராமலோ வேலை செய்கிறார்கள், மேலும் பொதுவான அம்சம் என்னவென்றால், பெண்களுக்கு ஆண்களை விட குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது.

- தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் அறிக்கையில், பெண்கள் செய்யும் **ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளை** மதிக்க வேண்டியதன் அவசியத்தை வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளது. இங்கு "வேலை" என்பதை வரையறுப்பது முக்கியம். இதில் பெண்கள் வீட்டிலும் சமூகத்திலும் செய்யும் ஊதியம் பெறாத வேலையை அங்கீகரிப்பதும், அதற்கேற்ப அரசாங்கக் கொள்கைகளை வடிவமைப்பதும் அடங்கும். இல்லையெனில், பாலின சமத்துவமின்மை வேரூன்றும் அல்லது மோசமடையும்.

வீட்டு வேலையில் ஈடுபடுதல்




- வாழ்வதற்கேற்ற ஊதியம், பாதுகாப்பான பணிபுரியும் சூழல்கள், மற்றும் பெண்கள் உட்பட அனைத்துப் பணியாளர்களதும் தன்மானம் போன்றவற்றினைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் **ஒன்றுசேர்வதற்கான உரிமை, கூட்டாக பேரம்பேசுவதற்கான உரிமை** போன்றவற்றிற்கான மதிப்பினை உறுதிப்படுத்தல்.
- புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் அவர்களுடன் தொடர்புடையோருக்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பொறுப்புக் கூறுவதனை உறுதிப்படுத்தி, பாதுகாப்பான ஒழுங்கான உரிமையினை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் புலப்பெயர்வினை முகவர்கள் மற்றும் தரகர்களுக்குப் பதிலாக அரச அரச இருதரப்பு உடன்படிக்கைகளினூடாக இலகுபடுத்தல்.

- வீட்டுப்பணியின் முறைசாராத் தன்மையினைக் கையாளும் **சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமவாயம்** 189இல் கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்தல்.

- அனைத்து பால்நிலையினையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் 'பாதுகாப்பானதும், வன்முறையற்றதுமான பணியுலகினை உறுதிப்படுத்துவதனை அரசின் கடமையாகப் பணிக்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமவாயம் C190 ILO கையெழுத்திட்டு, நடைமுறைப்படுத்தல்.

- அரசு மற்றும் தனியார் துறை அமைப்புக்களும் மகப்பேற்றின்போது தந்தையருக்கான விடுமுறையினை வழங்குவதுடன், போதுமான, அணுகக்கூடிய மற்றும் கட்டுப்படியாகக்கூடிய பராமரிப்பு சேவைகளையும் வழங்குதல்.

# உண்மை, நீதி மற்றும் இழப்பீடு

இலங்கை உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகளுக்கு மேலாகியும், அனைத்து இன மற்றும் மதக் குழுக்களும் கௌரவத்துடனும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய ஒரு அர்த்தமுள்ள அமைதி இன்னும் அடையப்படவில்லை. உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் போர் தொடர்பான அட்டூழியங்களுக்கு உண்மையையும் நீதியையும் தேடி வருகின்றனர், அவர்களில் பெரும்பாலானோர் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார்கள், மனைவிகள், உடன்பிறந்தவர்கள் மற்றும் குழந்தைகள் ஆவர். நம்பகமான ஆதாரங்களை மேற்கோள் காட்டி, ஐ.நா. பொதுச்செயலாளரின் 2012 அறிக்கை, போரின் போது 70,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காணாமல் போனதாக மதிப்பிட்டுள்ளது. பொறுப்புக்கூறலுக்கான போராட்டத்தில் முன்னணியில் இருந்த காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 9 தமிழ் பெண் உறுப்பினர்கள், அரசை அச்சமின்றி கேள்வி கேட்டதற்காக அடுத்தடுத்த அரசாங்கங்களால் பல்வேறு வகையான கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் குற்றமயமாக்கலுக்கு ஆளாகியுள்ளனர். போருக்குப் பிந்தைய காலத்தில் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்க மறுத்த அல்லது பதிலளிக்கத் தவறிய இலங்கை ஆயுதப்படைகளால் செய்யப்பட்ட துஷ்பிரயோகங்கள் குறித்து நம்பகமான விசாரணை நடத்த வேண்டும் என்று சிவில் சமூகம் அழைப்பு விடுக்கிறது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர்



70,000

— தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் கொலை வழக்குகள், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் தாக்குதல்கள் போன்றவற்றிற்கு விசாரணைசெய்து நீதி வழங்குவதாக வாக்குறுதியளித்தது. அது **காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம், இழப்பீட்டிற்கான அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம்** போன்ற 'உள்ளூர் பொறிமுறைகளின்' பணிகளினூடாக 'தேசிய ஒற்றுமை மற்றும்

நல்லிணக்கத்தினை' நோக்கிய வழிமுறைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்தது. ஆயினும், உண்மையையும் நீதியையும் நிலை நாட்டுவதில் அவர்களின் தொடர்ச்சியான தோல்வியினைக் கண்டவர்களாக பாதிக்கப்பட்ட பல சமூகங்கள் **உள்ளூர்ப் பொறிமுறைகளில** ் எவ்வித நம்பிக்கையையும் கொண்டிருக்கவில்லை.

- அரசாங்கமானது நீதியை நோக்கிய உள்நாட்டுப் பொறிமுறையினை நிறுவுவதற்கு முன், வன்முறையால் பாதிக்கப்பட்டு வாழ்வை மீட்டுக் கொண்ட சமூகங்களுடன் நம்பிக்கை உருவாக்கும் ஆழமான மற்றும் அர்த்தமுள்ள செயல்முறையை முன்னெடுக்க வேண்டும். அதற்கு இராணுவத்தினரை தேசிய வீரர்களாகப் பார்க்கும் சிங்கள பௌத்த இனத்துவ – தேசியவாதப் பார்வையினை சவாலுக்குட்படுத்த வேண்டிருயிருக்கும், உண்மைக்கும் நீதிக்குமான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினையும் அரசியல் விருப்பினையும் வலுவாக உறுதிப்படுத்த வேண்டும். யுத்தத்துடன் தொடர்புடைய குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலினை மேற்கொள்வதற்கான தேவை தொடர்பில் தேசியளவிலான புரிந்துணர்வினை அதிகரிக்க வேண்டும், இக்கேள்விகள் தொடர்பில் சமூகங்கள் மத்தியில் அர்த்தமுள்ள உரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். பொறுப்புக்கூறலைக் கோரும் தரப்புகள் இந்த ஆழமான அமைப்புச் சார்ந்த மாற்றத்திற்காக போராடுவது முக்கியமானதோடு, இவ் பிரச்சினைகளுக்கு சர்வதேச செயற்பாட்டாளர்களின் தலையீட்டைக் கவனத்தில் எடுப்பதும் அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும

- யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் **காணி மற்றும் காணியுடன் தொடர்புடைய முரண்பாடுகள்** தொடர்ந்தும் தீர்க்கப்படாதவையாகவே காணப்படுகின்றன. பல தமிழ்க் குடும்பங்கள் தமது பாரம்பரியமான நிலங்களிலிருந்து புலம்பெயர்ந்தே இருக்கின்றனர். அவர்களின் நிலங்கள் தொடர்ந்தும் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதுடன், அவை அவர்களுக்குப் பயனளிக்கும் விதத்தில் பயிரிடுவதற்கோ அல்லது சுற்றுலாத்துறைக்கோ பயன்படுத்துகின்றனர். அரசு, அரசசார்பற்ற மற்றும் தனியார் தரப்பினரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிகளை ஆக்கிரமிப்பதன் மூலம் புதிய காணி தொடர்பான முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றனர். அவர்கள் சாதாரண மக்களினால் அணுக முடியாதவாறு காணிப் பயன்பாட்டில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகின்றனர். இது பாரம்பரியமாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களை 'புனித பிரதேசம்' அல்லது 'பௌத்த இடங்கள்' எனக்கூறி அக்காணிகளை அவர்களிடமிருந்து பிடுங்கியெடுத்து, அவற்றிற்கு உரிமைகோரி, மீளப்பெயரிடும் பௌத்தபிக்குகளின் முயற்சிகளையும் உள்ளடக்குகின்றது. இத்திட்டத்தில் உதவுவதில் தொல்லியல் திணைக்களம் பிரதான பங்காளராக இருக்கின்றது.

- சர்வதேச மேற்பார்வையுடன் உண்மை மற்றும் நீதிக்கான அர்த்தமுள்ளதும் நடைமுறைப்படுத்தக்கூடியதுமான உள்நாட்டுப் பொறிமுறையொன்றினை உருவாக்குதல். அது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு (LLRC), காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான முறை-ப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு (PCICMP) மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பான ஆலோசனைச் செயலணி (CTF) போன்ற கடந்தகால முனைப்புக்களின் கண்டடைவுகளைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

- வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் உண்மையினை அறிவதற்கான கோரிக்கைகளை எதிர்கொள்வதற்கு காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் சட்டரீதியான ஆணையினை நிறைவேற்றுதல்.

- இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து தடுப்புக்காவல் நிலையங்களிலும் இராணுவ முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரதும் பெயர்களை வெளியிடுதல்.

- ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை பொறுப்புக்கூறல் திட்டம் போன்றவற்றுடன் ஒத்துழைத்தல்.

- சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களுக்கான விசாரணைகளை ஆரம்பித்தல்

- மே 18இனை தேசிய துக்க அனுஷ்டிப்பு நாளாக அங்கீகரித்து, தமிழ் குடும்பங்களின் நினைவேந்துதலுக்கான உரிமையினை அடிப்படை உரிமையாகப் பாதுகாத்தல்.

- நீண்டகால காணிப்பிணக்குகளை விசாரித்து, தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மாகாண காணி ஆணைக்குழுக்களை செயற்படுத்தல்.

# சட்டத் திருத்தங்கள்

இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் அனைத்துப் பிரஜைகளுக்கும் அடிப்படை உரிமைகளும், பாரபட்சப்படுத்தப்படாமையும் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளன. ஆயினும், குறிப்பிட்ட சில சட்டங்கள் பெண்கள் மற்றும் LGBTQI நபர்களை வெளிப்படையாகவே பாரபட்சப்படுத்துகின்றன.

1951ம் **ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டமானது** முஸ்லிம் பெண்களுக்கும் சிறுமியருக்கும் சில அடிப்படை உரிமைகளை நிராகரிக்கின்றது. திருமணம் செய்வதற்கான ஆகக்குறைந்த வயதெல்லை குறிப்பிடப்படாமையினால் சிறுவர் திருமணம் சட்டபூர்வமானதாக இருக்கின்றது. இதற்கான அர்த்தம் என்னவெனில், வேறு மதநம்பிக்கைகளைக் கொண்ட தமது வயதினைச் சேர்ந்தோரைப் போல முஸ்லிம் சிறுவர்கள் சட்டத்தினால் பாதுகாக்கப்படவில்லை என்பதாகும். மணப்பெண் தனது விவாகப்பதிவுப் பத்திரத்தில் கையொப்பமிடுவதில்லை, இது திருமணத்திற்கான அப்பெண்ணின் சுதந்திரமான, அறிந்துகொள்தலுடன் கூடிய சம்மதத்தினை கேள்விக்குட்படுத்துகின்றது. முஸ்லிம் ஆண்களுக்கு எவ்வித நிபந்தனைகளுமற்ற பல்தாரமணம் மற்றும் விவாகரத்து உண்டு. முஸ்லிம் தனியார் சட்டத்தினை காதி நீதிமன்றங்களில் நடுவர் தீர்ப்பு வழங்கும் காதி நீதிபதிகள் முற்றுமுழுதாக ஆண்களாகவே உள்ளனர்.

நாடு முழுவதிலுமுள்ள பெண்கள் குழுக்கள் **முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத் திருத்தத்திற்காக** 40 வருடங்களுக்கு மேலாக ஆதரித்து வாதாட வருகின்றனர். 1956ம் ஆண்டிலிருந்து அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பல ஆணைக்குழுக்கள் ஒவ்வொன்றும் மிகவும் அவசியமான இத்திருத்தத்தினை முன்மொழிந்திருக்கின்றன. **தேசிய மக்கள் சக்தியும் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில்** திருத்தத்தினைக் கொண்டு வருவதாக வாக்குறுதியளித்திருந்தது. ஆயினும், தற்போது அதிலிருந்து பின்வாங்குகின்றது. அரசாங்கமானது, பிற்போக்காளர்களையும், பெண்வெறுப்பாளர்களையும் திருப்திப்படுத்தாது, முஸ்லிம் பெண்களின் சமத்துவத்திற்கான மற்றும் நீதிக்கான உரிமையுடன் உடன் நிற்க வேண்டும்.

# 365 மற்றும் 365அ பிரிவுகள் ரத்து செய்யப்படுதல் மற்றும் 1951ஆம் ஆண்டின் MMDA சீர்திருத்தம்

- தண்டனைச் சட்டக்கோவையின் **365 மற்றும் 365அ** ஆகியவை காலணித்துவ சட்டவாக்கச் செயன்முறையின் மற்றுமொரு எச்சமாகும். இது இரண்டு ஒரே பாலினைச் சேர்ந்த வயதுவந்தோருக்கிடையில் சம்மதத்துடனான பாலியல் உறவினைத் தடைசெய்கின்றது. 2023இல் இலங்கை உயர்நீதிமன்றமானது, தண்டனைச் சட்டக்கோவையின் 365 மற்றும் 365அ இல் குறிப்பாக வயதுவந்தோருக்கிடையிலான தனிப்பட்ட, சம்மதத்துடனான பாலியல் உறவுகள் தொடர்பில் திருத்தங்களைச் செய்வதற்குத் தீர்மானித்தது. இது மனித கௌரவம் மற்றும் பாரபட்சப்படுத்தாமை ஆகிய கொள்கைகளுடன் பொருந்திப்போவதுடன் அரசியலமைப்புச் சட்டத்தையும் மீறாது. ஆயினும், இச்சட்டக் கட்டளைகளை அடிப்படையாகக் கொண்ட கைதுகளும், தவறான நடாத்துதலும் LGBTQ+ சமூகத்தினரைச் சேர்ந்தோரை நோக்கிய இலக்குவைக்கப்பட்ட தாக்குதல்களும் தொடர்கின்றன. இவர்கள் பெரும்பாலும் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கு அவர்களின் பாலியல் அல்லது பால்நிலை அடையாளத்தினை அடிப்படையாகக்கொண்டு அதிகாரிகளினால் அவமானப்படுத்தப்பட்டு, துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்றனர்.

- **அலைந்துதிரிவோர் கட்டளைச் சட்டமும்** நீண்டகாலமாக திருத்தப்படவேண்டிய மற்றுமொரு காலணித்துவ யுகத்தின் எச்சமாக இருக்கும் சட்டமாகும். இது அடிப்படையில் ஒழுக்கம் அல்லது நன்னடத்தை தொடர்பான சட்டமாகும், சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்ட மக்களை ஒடுக்கும் விதத்தில் இது பயன்படுத்தப்படுகின்றது. பாலியல் தொழிலாளர்களை, குறிப்பாக திருநங்கைகளை அச்சுறுத்துவதற்கும், தொல்லைசெய்வதற்கும், அவர்களை சிறையிலிடுவதற்கும் இக்கட்டளைச் சட்டம் பொலிசாரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

- **தேசிய மக்கள் சக்தியின்** தேர்தல் விஞ்ஞாபனமானது சட்ட ஆணைக்குழுவின் 2012க்குரிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கருக்கலைப்பு தொடர்பான விடயத்தினை எதிர்கொள்வதாக வாக்குறுதியளித்திருந்தது. இவை: பாலியல் வன்கொடுமைச் சம்பவத்தின்போது மற்றும் சிசுவிற்கு மரணத்தினை ஏற்படுத்தக்கூடிய குறைபாடு இருக்கும் சந்தர்ப்பத்தில் ஆகிய இரண்டு விடயங்களினடிப்படையில் பாதுகாப்பான கருக்கலைப்பினை உறுதிப்படுத்துகின்றன. ஆயினும், இலங்கையில் கருக்கலைப்பினை நாடும் பெரும்பாலான பெண்கள் இத்தகைய எதிர்பார்ப்புக்களுக்கு அப்பால் கருக்கலைப்பினை நாடுகின்றனர்.

- அரசியலமைப்புச் சட்டத்திற்கு முன்னர் உருவாக்கப்பட்ட பாரபட்சமான சட்டங்களைத் திருத்துவதற்கு அரசியலமைப்புச்சட்டத்தின் **பிரிவு 16–1சரத்தை ரத்து செய்தல்**

- **முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் பால்நிலை பாரபட்சமான** விதிகளை திருத்தி அமைத்தல்

- தண்டனைச் சட்டக்கோவையின் **பிரிவு 365 மற்றும் 365அ** ஆகியவற்றை ரத்து செய்தல்.

- **அலைந்துதிரிவோர் கட்டளைச் சட்டத்தை ரத்து செய்தல்.**

- கருக்கலைப்பு அனுமதிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்த விரிவான ஆலோசனைக்குப் பிறகு, கருக்கலைப்பை குற்றமற்றதாக்குதல்.

- 2024ம் ஆண்டில் பெண்களை வலுப்படுத்தல் சட்டம் இயற்றப்பட்டமையினையும், பெண்கள் ஆணைக்குழு வடிவில் அதன் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதனையும் கருத்தில்கொண்டு, **பெண்கள் விவகார அமைச்சு மற்றும் பெண்கள் பணியகம் உட்பட அரச பால்நிலைசார் அமைப்புக்களை** அவற்றின் ஆணை, நிதி, வளங்கள் மற்றும் திறன்கள் தொடர்பில் மீள்பார்வை செய்தல்.

# சுற்றுச்சூழல் நீதி

பல நூற்றாண்டுகால காலணித்துவம், ஏகாதிபத்தியம், சுரண்டல், வளங்களை பிரித்தெடுத்தல் மற்றும் அசமத்துவம் போன்றவற்றிலிருந்து எழுகின்ற காலநிலை நெருக்கடியினை இலங்கை எதிர்கொள்கின்றது. உயர் வெப்பநிலை, சிக்கலான நீர்நிலைகளின் போக்குகள் மற்றும் தீவிரமான காலநிலைசார் நிகழ்வுகளுக்கு முகங்கொடுத்தல் போன்றன நாட்டினை மோசமடையும் காலநிலை மாற்றத்திற்கு மிகையாக பாதிப்படையக்கூடிய நிலையினை ஏற்படுத்தியுள்ளது. இது விவசாயம், நீர் வளத்துறைகள், கரையோரப் பகுதிகள் மற்றும் மனித சுகாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க அபாயத்தினைக் கொண்டுள்ளது.

## “வாழ்வுரிமையை அரசியலமைப்பில் சேர்க்கவும்”

- தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் மீன்பிடி மற்றும் பயிரிடல் பிரதான வருவாய்க்கான மார்க்கங்களாக உள்ள கீழ்நிலைப் பிரதேசங்கள் போன்ற இலகுவில் பாதிக்கப்படக்கூடிய சூழலியல் பிரதேசங்களில் பாரியளவிலான **அகழ்வு மற்றும் சக்திவலுத் திட்டங்களை** மேற்கொள்வதற்குத் திட்டமிட்டன. இத்தகைய சில பிரதேசங்களிலுள்ள மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அந்த அநீதியான வரலாற்றையும் தம்முடன் சுமக்கின்றனர்.

- தற்போது இந் நெருக்கடியினை எதிர்கொள்வதற்குப் பரவலாக உள்வாங்கப்பட்டுள்ள முறைமைகள் சூழல் மீதான நச்சுத்தாக்கத்தினை ஏற்படுத்துவதற்குப் பொறுப்பானவர்களை பொறுப்புக்கூறச் செய்யத் தவறுகின்றது. **காபன் நாணயமானது** (Carbon credits) இயற்கையின் பெறுமதியான மூலக்கூறுகளை பண்டமாக்குகின்றது, இது நிகழ்காலத்தில் மாசடைதலையும், சூழல் சிதைவடைவதனையும் நிறுத்துவதில்லை. இவை காலநிலைச் செயற்பாடுகளின் போர்வையில் மேற்கொள்ளப்படும் போலியான பசுமைப் புரட்சிக்கான உதாரணங்களாகும். (greenwashing) இதற்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும் .

- தீவிரமடையும் சுற்றுச்சூழல் நெருக்கடியின் தாக்கத்தினை மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களே தாங்குகின்றன - இனியும் அவை தாங்குபவையாகவே காணப்படுகின்றது. குறிப்பாக பெண்கள் தமது வாழ்வாதாரத்தின் அடிப்படையில் நலிவுற்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் அறுவடை வீழ்ச்சியுற்றதன் காரணமாக, அதிகரித்த பராமரிப்புப் பணிகளையும், உணவு உற்பத்தித் தேவையினையும் எதிர்கொள்வதுடன், பயிர்கள் நாசமடைதல் மற்றும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றின் காரணமாக அதிகளவிலான வன்முறை மற்றும் வறுமையினை அனுபவிக்கக்கூடும். காலநிலை மாற்றமானது வருமானத்திற்கான மாற்றுவழிகளைத் தேடிப் பெண்கள் வெளிநோக்கிப் புலப்பெயர்வதிலும் பாரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது நாட்டிற்குள், நகரங்களை நோக்கிய சேவை மற்றும் உற்பத்திப் பொருளாதாரங்களுக்குரியதாகவோ அல்லது நாட்டிற்கு வெளியில் வீட்டுப்பணிக்கான-தாகவோ இருக்கக்கூடும்.

- **தேசிய மக்கள் சக்தியின்** தேர்தல் விஞ்ஞாபனமானது, சூழற் பாதுகாப்பு, தீர்வுகளைக் கண்டுபிடிக்க சமூகங்களுடன் இணைந்து செயற்படல் உள்ளடங்கலாக சூழல் குறித்து விரிவாகப்பேசுகின்றது. அத்துடன் 'மனிதனை பூமியின் தனித்த உரிமையாளர்களாக முன்வைக்கும் மனிதமைய சிந்தனையிலிருந்து' விலகுவதற்கான விருப்பினையும் வெளிப்படுத்துகின்றது. மேலும், **'சுத்தமான இலங்கை'** திட்டமானது, 'சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை தொடர்பான நாடளாவிய முனைப்புக்களை மாற்றம், ஒன்றிணைத்தல் மற்றும் சேர்ந்து செயற்படல் போன்றவற்றினூடாக மாற்றியமைக்க' முயல்கின்றது. இக்கொள்கை இலக்குகளை மையமாகக்கொண்டு, நாங்கள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்,

- உயிர்வாழ்வதற்கான உரிமையினை அரசியலமைப்புச்சட்டத்தில் அடிப்படை உரிமையாகப் பாதுகாத்தல்

- அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அர்த்தமுள்ள சூழல் மதிப்பீடுகள் மற்றும் சமூகமட்ட கலந்துரையாடல்களை மேற்கொள்வதனை கட்டாயமானதாக்கி, சுத்தமான காற்று, நீர் மற்றும் சுகாதார பராமரிப்புச் சேவைகளுக்கான அணுகுதலினை உறுதிப்படுத்தும் ஆரோக்கியமான சூழலுக்கான உரிமைச் சட்டத்தினை இயற்றுதல்.

- அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சூழலியல் மதிப்பீட்டினை அர்த்தமுள்ள விதத்தில் மேற்கொள்வதனைக் கட்ட-ாயமாக்குவதுடன், போதுமான விபரங்களை வழங்கி சமூகமட்ட ஆலோசனைக் கலந்துரை-யாடல்களை முன்னெடுத்தல், சமூகங்கள் அபிவிருத்தித் திட்டங்களால் பாதிக்கப்படுமிடத்து அவர்களுக்கு நியாயமான நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

- சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் மாசுபடுத்துபவர்கள் மீது அபராதம் விதித்தல் மற்றும் பெறப்பட்ட நிதி பாதிக்கப்பட்ட உள்ளூர் சமூகங்களுக்குத் திருப்பித் தரப்படுவதை உறுதி செய்தல்.

# பெண்களுக்கெதிரான வன்முறை

பெண்கள் குடும்பம் எனும் தனிப்பட்ட வெளிக்குள்ளும், பொதுவெளிகளிலும் அதிகளவிலான வன்முறைகளை எதிர்கொள்கின்றனர். பெண்கள் தமது வாழ்நாளில் வேறு யாரையும்விட தமது துணையினால் உடல்ரீதியான அல்லது பாலியல்ரீதியான வன்முறையினை அனுபவிக்கும் வாய்ப்பு இருமடங்காக உள்ளது. வருடாந்தம் பொலிஸ் நிலையத்திலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவினர் ஆயிரக்கணக்கான பாலியல் வன்முறை தொடர்பான முறைப்பாடுகளைப் பெறுகின்றனர். ஆயினும், வருடாந்தம் நான்கு வழக்குகளுக்கு மேல் தீர்ப்புகள் வழங்கப்படுவதில்லை. பெண்கள் பணிபுரியும் இடங்களிலும் பொதுப்போக்குவரத்திலும் அதிகளவில் பாலியல் தொல்லைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். மேலும் சமூக வலைத்தளம் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் அதிகரிப்புடன் புதிய வடிவங்களில் பெண்களும் சிறுமியரும் வன்முறைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நலிவுற்றநிலையில் இருக்கின்றனர்

- இருபது வருடத்திற்கு முன் இலங்கை **வீட்டு வன்முறைகளிலிருந்து** பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தினை இயற்றியது. ஆயினும், பெண்களைவிட குடும்பம் எனும் அலகினைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமையளிக்கும் ஆணாதிக்க கருத்தியல் மற்றும் வீட்டிற்குள் இடம்பெறும் வன்முறையினை அங்கீகரிப்பதில் சட்ட அமுலாக்கத்தினரின் தயக்கம் போன்றவை இந்தச் சட்டத்தினைப் பயன்படுத்தும் பெண்களின் எண்ணிக்கையினை மட்டுப்படுத்தியுள்ளது.

- வன்முறை தொடர்பில் சட்ட அமுலாக்கத்தினர் முக்கியத்துவமளிக்காமை, சட்டத்தின்கீழ் போதியளவு பாதுகாப்பின்மை, பாதிக்கப்படுவோர் பலர் வன்முறையினை ஏற்றுக்கொள்ளுதல் போன்றன அத்தகைய வன்முறையினை மேற்கொள்வதுடன், அவற்றிற்கான தண்டனை விலக்கினையும் வழங்கி சமூகத்திலும், குடும்பங்களிலுமுள்ள அசமத்துவமான பால்நிலை அதிகார உறவுகளை மேலும் வலுப்படுத்துகின்றது. ஆயினும், குற்றவியல் சட்டம் மற்றும் சிறைச்சாலைக் கட்டமைப்பு போன்றவற்றினை நடைமுறைப்படுத்துவதானது, குற்றம் மற்றும் பயங்கரவாதத்தினை எதிர்கொள்வதற்கான சட்டஅமுலாக்கத்தில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த ஏழைகளை இலக்குவைப்பதனைப் பெரும்பாலும் உறுதிப்படுத்துகின்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

- நெருக்கடி நேர காப்பகங்கள், சட்ட உதவிகள் மற்றும் உளவள ஆலோசனை போன்ற ஆதரவுச் சேவைகள் போதியளவு இல்லாமையினால் பாதிக்கப்பட்டு பிழைத்திருப்போர் மேலும் வலுவிழக்கின்றனர். அத்தகைய பல முனைப்புக்கள் அரசசார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்றன. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது, பல அரசினால் ஆதரவளிக்கப்பட்ட அமைப்புக்களே தமது கதவுகளை முதலில் மூடிக்கொண்டன.

- தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனமானது, வன்முறையினால் பாதிக்கப்பட்டு பிழைத்திருப்போருக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் பாலியல் மற்றும் மகப்பேற்று சுகாதார உரிமைகளுக்கான (SRHR) அர்ப்பணிப்பு போன்றவை உட்பட பால்நிலை நியாயமற்ற விடயத்தினை ஆழமாக எதிர்கொள்கின்றது. இவ்வாக்குறுதிகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவது அவசியமாகும். மேலே கூறப்பட்டுள்ளதுபோல, பால்நிலை **நியமங்களில் மாற்றங்கள்** ஏற்படும்போதே அவை பெண்களது வாழ்விலும் சமூக உறவாடல்களிலும் நீண்டகால தாக்கத்தினை ஏற்படுத்தும்.

- 2016ஆம் ஆண்டு பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை தடுப்பு ஆணையத்தின் எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கையை செயல்படுத்துவதற்கான **பணிக்குழுவின் பரிந்துரைகளை** செயல்படுத்துதல்.

- பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட வன்முறையினால் பாதிக்கப்பட்டு பிழைத்திருப்போருக்கு **சட்ட உதவி ஆணைக்-குழுவினூடாக இலவச சேவைகளை ஏற்படுத்திக்கொடுத்தல்**

- தங்குமிட சேவைகளுக்கு (பாதுகாப்பான வீடுகள்/தங்குமிடம்) சாத்தியமான ஆதரவிற்காக தேசிய பட்ஜெட்டில் இருந்து நிதியை ஒதுக்குதல்

- அனைத்துவிதமான பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகளையும், அச்சுறுத்தல்களையும் மற்றும் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட வன்முறை உட்பட அரசியலிலுள்ள பெண்களுக்கெதிரான வெறுப்பு பேச்சுக்களையும் தடுத்தல், விசாரணைசெய்தல், வழக்குத்தொடர்தல் மற்றும் தண்டனையளித்தல்.

- திட்டவட்டமான முறைப்பாடுகளை எதிர்கொள்வதற்கும், உரிய சேவைவழங்கு-னர்களுக்குப் பரிந்துரைசெய்வதனைச் சாத்தியப்படுத்துவதற்கும், மாவட்ட – மட்ட பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகளுக்கெதிரான மன்றங்களை வலுப்படுத்தல்.

- பாரம்பரியமான பால்நிலை நியமங்கள் மற்றும் வகிபாகங்களை கேள்விக்குட்படுத்தி அவற்றினை மாற்றுவதற்கு கலை, கலாசாரம், கல்வி மற்றும் பொழுதுபோக்கு போன்றவற்றினைப் பயன்படுத்தல்

ROSA LUXEMBURG STIFTUNG SOUTH ASIA

இந்தக் கொள்கைச் சுருக்கமும் அதை ஆதரித்த ஆய்வும் ரோசா லக்சம்பர்க் ஸ்டி.்.ப்டுங்கால் ஆதரிக்கப்பட்டது, இதற்கு ஜேர்மனி கூட்டாட்சிக் குடியரசின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான கூட்டாட்சி அமைச்சின் நிதியுதவி வழங்கப்பட்டது.

மூலத்தையும் அசல் வெளியீட்டாளரையும் முறையாக ஒப்புக் கொண்டால் மட்டுமே இந்த வெளியீடு அல்லது அதன் பகுதிகளை யார் வேண்டுமானாலும் இலவசமாகப் பயன்படுத்தலாம். இந்த வெளியீட்டின் உள்ளடக்கத்திற்கான முழுப் பொறுப்பும் ஆசிரியரிடமே உள்ளது மற்றும் அது ஆசிரியரின் கருத்துக்களை பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.

SSA SOCIAL SCIENTISTS' ASSOCIATION

சமூக விஞ்ஞானிகள் சங்கம்
380/86, சரண வீதி, கொழும்பு 07.
வலைத்தளம்:https://ssalanka.org/
மின்னஞ்சல்:info@ssalanka.org | ssainfolanka@gmail.com